**சுருக்கம்**

வேளாண்மை-உழவர் நலன் – வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 மற்றும் மானிய கோரிக்கை 2022-2023-ன் பல்வேறு அறிவிப்புகள் - மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் 2022-2023-ன்கீழ் செயல்படுத்த ரூ.27.50 கோடி நிதி ஒப்பளிப்பு -ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.113** **நாள்:31.05.2022.**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**
**சுபகிருது வருடம், வைகாசி 17**

**படிக்கப்பட்டவை :**

1. அரசாணை (நிலை) எண்.160, வேளாண்மை-உழவர் நலத் (தோ.க.2) துறை, நாள் 26.10.2021.
2. 2022-2023-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை 19.03.2022 மற்றும் 13.04.2022 அன்று நடைபெற்ற மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.
3. அரசாணை (2டி) எண்.81, வேளாண்மை-உழவர் நலத் (வே.உ_5) துறை, நாள் 28.4.2022.
4. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.மாநி.2/6285/2022, நாள் 10.5.2022 மற்றும் 25.05.2022.

*******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2021-2022-ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.4155.02 இலட்சம் (ரூபாய் 41 கோடியே ஐம்பத்தைந்து இலட்சத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 2021-22-ம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிவிப்பு எண்.28, 29, 30 மற்றும் 31 மானிய கோரிக்கை அறிவிப்பு 7 மற்றும் 16 ஆகியவை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் 19.03.2022 மற்றும் 13.04.2022 ஆகிய நாட்களில் நடைபெற்ற 2022-2023-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை / மானிய கோரிக்கையின் போது சட்ட மன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட

[த.பி.பா]

அறிவிப்புகளுள் பின்வரும் அறிவிப்புகள் 2022-2023-ஆம் நிதியாண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளன.

**வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023**

| அறிவிப்பு எண். | அறிவிப்புகள் |
|---|---|
| 25 | **பழப்பயிர்கள் மேம்பாட்டு இயக்கம்**<br>பழப்பயிர்கள் சாகுபடியை 22 ஆயிரம் ஏக்கரில் மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்க தமிழகத்தில் இவ்வாண்டு "பழப் பயிர்கள் மேம்பாட்டு இயக்கம்" செயல்படுத்தப்படும். நடவுச் செடிகளையும் இதர இடுபொருட்களையும் வழங்கி இத்திட்டம் ஊக்குவிக்கப்படும்.<br>தரமான மா, கொய்யா, சப்போட்டா, நாவல், பலா, இலந்தை, மாதுளை போன்ற நடவுச் செடிகளுக்கு முன்பதிவு செய்வது முதல் இடுபொருட்கள் விநியோகம், தரம் குறித்த கருத்துகளைப் பதிவு செய்தல் வரை அனைத்து செயல்பாடுகளும் இணைய வழியில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம், 20 கோடியே 21 இலட்சம் ரூபாய் ஒன்றிய, மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும். |
| 26 | **உயர் விளைச்சல் பெற துல்லிய பண்ணையத் திட்டம் (Precision Farming)**<br>புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையில் துல்லிய பண்ணையம் செயல்படுத்தப்படும். இம்முறையில், இடுபொருட்கள், பணி ஆட்களின் செலவினம் குறைவதோடு, அதிக மகசூல் மற்றும் ஏற்றுமதித் தரம் வாய்ந்த விளைபொருட்கள் கிடைக்கிறது. இத்திட்டம் எட்டாயிரத்து 300 ஏக்கர் பரப்பளவில் ஐந்து கோடி ரூபாய் மாநில நிதியில் விவசாயிகளுக்கு நடவுச்செடிகள், விதைகள் இடுபொருட்கள் வழங்கி, உயர்தொழில் நுட்பத்துடன் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும். |
| 27 | **ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல்**<br>ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு, தென்னை, மா, கொய்யா, வாழை பயிரிட்டுள்ள சிறு / குறு விவசாயிகளுக்கு "ஊடுபயிர் தொகுப்பு" வழங்கப்படும். இத்திட்டம் 38 ஆயிரம் ஏக்கர் பரப்பில், 27 கோடியே 51 இலட்சம் ரூபாய் நிதியில் செயல்படுத்தப்படும். |
| 28(i) | **உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி (Hi Tech Horticulture)**<br>அதிக வருவாய் அளிக்கக் கூடிய பசுமைக் குடில்கள், நிழல்வலைக் குடில்கள், நிலப்போர்வை அமைத்தல் போன்ற |

| | |
|---|---|
| | உயர் தொழில்நுட்பங்கள் மூலம் வண்ணக் குடைமிளகாய், தக்காளி, வெள்ளரி, கொய்மலர்கள் மற்றும் காய்கறிகள் பயிரிட 25 கோடியே 15 இலட்சம் ரூபாயில் அமைக்கப்படும். |
| 28(ii) | நகர்ப்புர மக்கள் தங்களுக்கு தேவையான காய்கறிகளையும் கீரைகளையும் வளர்த்துப் பயன்பெறும் வகையில் ஹைட்ரோபோனிக்ஸ், செங்குத்துத் தோட்டத்தளைகள் (Vertical Garden) 500 பயனாளிகளுக்கு ரூபாய் 75 இலட்சம் நிதியில் வழங்கப்படும். |
| 31 | **<u>மலர் சாகுபடி மூலம் தினசரி வருமானம்</u>**<br><br>உதிரிப் பூக்கள் உற்பத்தியில் தேசிய அளவில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. மல்லிகை சாகுபடி பரப்பு, உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. மகளிரின் அன்றாட வருமானத்தை உயர்த்தவும், மல்லிகை, சம்பங்கி, சாமந்தி, ரோஜா, செவ்வந்தி போன்ற மலர்கள் சாகுபடியை நான்கு ஆயிரத்து 250 ஏக்கரில் மேற்கொள்ள, ஐந்து கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதியில் திட்டம் செயல்படுத்தப்படும். |
| 32 | **<u>உழவர் சந்தைகளில் காய்கறி வரத்தை அதிகரிப்பதற்கான சிறப்பு திட்டம்</u>**<br><br>காய்கறிகளின் வரத்து குறைவாக உள்ள உழவர் சந்தைகளைக் கண்டறிந்து, சிறப்புக் கவனம் செலுத்தி, அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் காய்கறிகள் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும். அதன்படி இவ்வாண்டு காய்கறிகளை கூடுதலாக ஆறு ஆயிரத்து 250 ஏக்கரில் பயிரிட விதைகள், குழித்தட்டு நாற்றுகள், இடுபொருட்கள் ஆகியவற்றை வழங்கி இத்திட்டம் ஐந்துகோடி ரூபாய் நிதியில் மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், உழவர் சந்தைகளுக்கு காய்கறிகள் வரத்து அதிகரிக்கவும், தொடர்ந்து கிடைக்கவும் வழிவகை செய்யப்படும். |
| 37 | **<u>அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல்</u>**<br><br>தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மாணவியர் விடுதிகளிலும் காய்கறி, பழங்கள், மூலிகைச் செடிகளுக்கான தோட்டம் அமைக்கப்படும். இத்தோட்டங்கள் பழங்கள், காய்கறிகள், மூலிகைச்செடிகளை, மாணவிகள் கண்டறியவும், சாகுபடி முறைகள், அவற்றிலுள்ள ஊட்டச்சத்துக்கள் பற்றி அறிந்து கொள்ளவும் உதவும்.<br><br>இத்திட்டத்தின் மூலம் பழச்செடிகள், மூலிகைச்செடிகள், தென்னங் கன்றுகள், காய்கறி விதைகள், தோட்டக்கருவிகள் உள்ளிட்ட இதர இடுபொருட்கள் அடங்கிய தொகுப்பு விடுதி ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் 200 விடுதிகளுக்கு முழு மானியத்தில் 20 இலட்சம் ரூபாய் நிதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். |

| மானியக் கோரிக்கை 2022-2023 | |
|---|---|
| 11 | <u>வெங்காய சாகுபடி இயக்கம்</u><br>தமிழகத்தில் வெங்காய சாகுபடிப் பரப்பினை உயர்த்தியும், வெங்காய சேமிப்பு அமைப்புகளை உருவாக்கியும், பொது மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும் வகையில், 2022-2023ஆம் ஆண்டில் வெங்காய சாகுபடி இயக்கம் 40 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.<br>தமிழக மக்களுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி வெங்காயம் கிடைக்கும் வகையில், 27,170 ஏக்கரில், விதை, இடுபொருட்களுக்கு ஏக்கருக்கு ரூ.8,000 வீதம் மானியம் வழங்கியும், அறுவடை செய்யப்பட்ட வெங்காயத்தினை சேமித்து வைத்து, தேவையான போது சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக, மானியத்தில் வெங்காய சேமிப்பு அமைப்புகள் அமைக்கவும், 2022-2023 ஆம்ஆண்டில் 40 கோடி ரூபாய் செலவில் வெங்காய சாகுபடி இயக்கம் செயல்படுத்தப்படும். |

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உயர் மதிப்பு வேளாண் திட்டங்களில் வழக்கமாக வழங்கப்படும் மானிய தொகையினை விட 20% சதவீதம் கூடுதல் மானியம் வழங்கும் விதமாக ரூ.5.00 கோடி நிதி ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் கடிதங்களில் 2022-2023-ஆம் ஆண்டு தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்திடவும் அதில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 19.03.2022 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கை மற்றும் 13.04.2022 அன்று நடைபெற்ற மானிய கோரிக்கையின் போது சட்ட மன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் மேலே பத்தி-2ல் காணும் அறிவிப்புகளை செயல்படுத்திடவும் ரூ.30,00,00,000/-க்கு (ரூபாய் முப்பது கோடி மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தோட்டக்கலை மற்றும் மலைப்பபயிர்கள் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2022-2023-ஆம் நிதி ஆண்டில் மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தினை இணைப்பு- Iல் கண்டுள்ளவாறு திட்ட இனங்களை செயல்படுத்திடவும், அதில் மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 19.03.2022 அன்று நடைபெற்ற வேளாண்மை நிதிநிலை அறிக்கை மற்றும் 13.04.2022 அன்று நடைபெற்ற மானிய கோரிக்கையின் போது சட்ட மன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளுள் மேலே பத்தி-2ல் காணும் அறிவிப்புகளை செயல்படுத்திடவும் ரூ.27,50,00,000/-(ரூபாய் இருபத்து ஏழு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி

ஆணை வெளியிடப்படுகிறது. இத்திட்டத்திற்கான செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வாணையுடன் இணைப்பு II-ஆக சேர்க்கப்பட்டுள்ளது.

6. மேலே பத்தி-5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 2401-00 - பயிர்வளர்ப்பு – 119 தோட்டக்கலையும் காய்கறி பயிர்வளர்ப்பும் – மாநிலச் செலவினங்கள் – BJ – மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் – 311 மானியங்கள் – 01- தனித்திட்ட மானியம் | ரூ. 27,50,00,000/- |

DPC: 2401-00-119-BJ-31101

7. மேலே பத்தி-5-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், அவர் இத்திட்டத்திற்கு உரிய வழிகாட்டுதல்களை தவறாமல் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

8. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இத்திட்டத்தில் உயர்மதிப்பு தோட்டக்கலைத் திட்டங்களான நிழல்வலைக் குடில் மற்றும் பசுமைக் குடில் ஆகிய இனங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு வழக்கமாக வழங்கப்படும் மானியத் தொகையினை 20% சதவீதம் கூடுதல் மானியத் தொகைக்கான செலவினத்தை மேற்கொள்ள தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் 30.05.2021 நாளிட்ட அ.சா. எண்.227/கூ.செ(ஜிகேட்டி)/2022 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-05.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-05.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA), சென்னை-18.
இருப்பிடத் தணிக்கை அலுவலர், சென்னை-09.
கருவூல கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-08.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-09.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-09.
நிதித் (வே.உ.ந.) துறை, சென்னை-09.
சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, சென்னை-09.
வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.1/அநமு 3/வ & தி), சென்னை-09.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-09.
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.7230/தோ.க.2/2022.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

31/05/2022
பிரிவு அலுவலர்

## இணைப்பு - I

அரசாணை (நிலை) எண்.113, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள்: 31.05.2022

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்ட இனங்கள் | | மானிய சதவீதம் | செயல் திட்டம் 2022-2023 | |
|---|---|---|---|---|---|
| | | | | பொருள் இலக்கு | நிதி இலக்கு |
| I | தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கம் (ஏக்கர்) | | | | |
| 1 | காய்கறி பயிர்களுக்கான குழித்தட்டு நாற்றுக்கள் மூலம் பரப்பு விரிவாக்கம் | | 40% | 4,375.000 | 350.000 |
| 2 | விதைகள் மூலம் காய்கறி பயிர்கள் பரப்பு விரிவாக்கம் | | 40% | 2,724.775 | 108.991 |
| 3 | சாதாரண நடவு மூலம் பழங்களில் பரப்பு விரிவாக்கம் | நிதிநிலை அறிக்கை 2022-2023 **அறிவிப்பு எண்.25** பழப்பயிர்கள் மேம்பாட்டு இயக்கம் | 40% | 2,837.500 | 124.480 |
| 4 | அடர்நடவு மூலம் பழப்பயிர் பரப்பு விரிவாக்கம் | | 40% | 100.000 | 5.876 |
| 5 | நறுமணப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் | | 40% | 1,375.000 | 88.000 |
| 6 | மலர் பயிர்களில் பரப்பு விரிவாக்கம் | நிதிநிலை அறிக்கை 2022-2023 **அறிவிப்பு எண்.31** மலர் சாகுபடி மூலம் தினசரி வருமானம் | 40% | 1,887.500 | 167.000 |
| | **மொத்தம்** | | | 13,299.775 | 844.347 |
| II | உயர் தொழில் நுட்பமுறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி | | | | |
| 1 | நிழல் வலைக்குடில் (சதுரமீட்டர்) | நிதிநிலை அறிக்கை 2022-2023 **அறிவிப்பு எண்.28** உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி | 50% | 20,000 | 71.000 |
| 2 | பசுமை குடில் (சதுரமீட்டர்) | | | 3,000 | 14.025 |
| 3 | ஹைட்ரோபோனிக்ஸ் (அலகு) | | 50% | 250 | 37.500 |
| 4 | செங்குத்துதோட்டம் (அலகு) | | | 250 | 37.500 |
| | | | **மொத்தம்** | 23.500 | 160.025 |
| III | அறுவடை பின்சார் மேலாண்மை | | | | |
| 1 | குறைந்த மதிப்பிலான வெங்காய சேமிப்பு கிடங்கு (மெட்ரிக்டன்) | மானிய கோரிக்கை 2022-2023 **அறிவிப்பு எண்.11** வெங்காய சாகுபடி இயக்கம் | 50% | 2,000 | 70.000 |

[த.பி.பா]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| IV | முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத் திட்டம் | | | | |
| 1 | மாடித் தோட்டத் தளைகள் (எண்கள்) (போக்குவரத்து செலவு உட்பட) | | 50% | 25,000 | 112.500 |
| V | அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல் (எண்கள்) | நிதிநிலை அறிக்கை 2022-2023 <u>அறிவிப்பு எண்.37</u> | 100% | 250 | 20.000 |
| VI | உயர்விளைச்சல் பெற துல்லிய பண்ணையத் திட்டம் (ஏக்கர்) | நிதிநிலை அறிக்கை 2022-2023 <u>அறிவிப்பு எண்.26</u> | | 4166.66 | 250.000 |
| VII | கூடுதல் வருமானம் ஈட்டும் செயல்பாடுகள் | | | | |
| 1 | காளான் வளர்ப்பு கூடம் (எண்கள்) | | 50% | 75 | 37.500 |
| VIII | பயிர் ஊக்கத் தொகை | | | | |
| 1 | உழவர் சந்தைகளில் காய்கறி வரத்தை அதிகரிப்பதற்கான சிறப்பு திட்டம் (ஏக்கர்) | நிதிநிலை அறிக்கை 2022-2023 <u>அறிவிப்பு எண்.32</u> | | 6,250 | 500.000 |
| IX | ஊடு பயிர் சாகுபடியை ஊக்குவித்தல் | | | | |
| 1 | தென்னையில் ஊடு பயிராக வாழை (ஏக்கர்) | நிதிநிலை அறிக்கை 2022-2023 <u>அறிவிப்பு எண்.27</u> | 40% | 3,571.425 | 375.000 |
| 2 | வாழையில் ஊடு பயிராக காய்கறிகள் (ஏக்கர்) | | | 5.000 | 200.000 |
| | | | மொத்தம் | 8,571.425 | 575.000 |
| X | தோட்டக்கலை கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம் (எண்கள்) | | 50% | 4148 | 150.628 |
| XI | வெற்றிலையில் ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை (ஏக்கர்) | | | 750 | 30.000 |
| | | | ஆக மொத்தம் | | 2750.000 |

சி. சமயமூர்த்தி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

31/05/2022
பிரிவு அலுவலர்

[த.பி.பா]

**இணைப்பு-II**

அரசாணை (நிலை) எண்.113, வேளாண்மை-உழவர் நலத்(தோ.க.2) துறை, நாள்:31.05.2022

## மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம்
## 2022-2023 ஆம் ஆண்டிற்கான இனவாரியான வழிகாட்டுதல்கள்

**பொதுவான வழிகாட்டுதல்கள்**

1. பயனாளிகள் தேர்வு இணையவழி மூலம் மட்டுமே தேர்வு செய்யப்பட வேண்டும். இதற்கான இணைப்பு உழவன் செயலியில் அளிக்கப்பட வேண்டும். (https://www.tnhorticulture.tn.gov.in/tnhortnet/login.php)
2. திட்ட இலக்குகளை மாவட்டத்திற்கு தெரியப்படுத்திய 7 தினங்களிலிருந்து ஒவ்வொரு வட்டாரங்களிலும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.
3. திட்ட இனங்களை செயல்படுத்துவதில் மாவட்ட தோட்டக்கலை இணை/ துணை இயக்குநர் முக்கிய பங்கு வகிப்பதுடன் சரியான வழிகாட்டுதல்களை வட்டாரங்களுக்கு வழங்கிட வேண்டும்.
4. வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரே திட்ட இனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளியை சரிபார்த்து அங்கீகரிக்கும் அதிகாரம் உடையவராவார்.
5. பயனாளிகள் / விவசாயிகளின் வகை, பாலினம் மற்றும் திட்டத்திற்கான தகுதி ஆகியவற்றை உதவி தோட்டக்கலை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர் கண்டறிந்து பயனாளி / விவசாயிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
6. திட்ட பலனைப் பெற, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிக்கு சொந்த நிலம்/குத்தகை நிலம் (10 வருட பதிவு செய்யப்பட்ட குத்தகை) இருக்க வேண்டும்.
7. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கான பணப்பரிவர்த்தனை, மின்னணு தீர்வை (ECS) மூலமாகவோ அல்லது DBT மூலமாகவோ வழங்குவதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி / கூட்டுறவு வங்கி ஆகிய ஏதேனும் ஒன்றில் அவர் கணக்கு வைத்திருக்க வேண்டும்.
8. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி, இந்திய அரசின் UIDAI (இந்திய தனிப்பட்ட அடையாள ஆணைய அமைப்பு) திட்டத்தில் பதிவு செய்தவராக இருத்தல் வேண்டும். மேலும், அவரது வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
9. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி திட்டத்தில் பயன்பெற இனங்களுக்கு ஏற்றவாறு ஆதார் அட்டை, குடும்ப அட்டை, பட்டா/சிட்டா, அடங்கல், நிலவரைபடம், வங்கி கணக்கு புத்தகம், மண் மற்றும் நீர் பரிசோதனை அறிக்கை (பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடிலுக்கு மட்டும்) போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.
10. திட்டம் சார்ந்த செயலாக்கத்திற்கு முன் முந்தைய ஆண்டுகளில் பயனடைந்த விவசாயியை மீண்டும் தேர்வு செய்வதை தவிர்த்து சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும்.
11. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், காளான் வளர்ப்பு கூடம் மற்றும் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு போன்ற இனங்களில், மானியம் பெறும் விவசாயிகள் அடுத்த 7 ஆண்டுகள் வரை பயன் பெற இயலாது. மேலும், பரப்பு விரிவாக்கம் திட்ட இனத்தின் கீழ் மானியம் பெறும் விவசாயிகள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் வரை பயன்பெறுவதை தவிர்க்க வேண்டும்.

[த.பி.பா]

12. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில், நிழல்வலைக்குடில், காளான் வளர்ப்பு கூடம் மற்றும் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு போன்றவை அனைத்தும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் - தேசிய தோட்டக்கலை இயக்க நெறிமுறைகள் மற்றும் தர நிலைகளைப் பின்பற்றி அமைக்க வேண்டும்.
13. இத்திட்டத்தின் கீழ், விவசாயிகள் நடவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து செலவுகளை விவசாயிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும்.
14. விவசாயிகள் அனைத்து திட்ட வழிகாட்டுதலையும் பின்பற்றியுள்ளார் என்பதனை வட்டார அலுவலர்கள் உறுதி செய்த பிறகே DBT முறையில் பயனாளிக்கு மானியம் விடுவிக்கப்பட வேண்டும். (பிற வகையிலான பரிவர்த்தனையைத் தவிர்க்க வேண்டும்)
15. தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி குறிப்பிட்ட காலத்திற்குள், பணியாணையில் குறிப்பிட்டவாறு, பணியினை மேற்கொள்ளவில்லை என்றால், சம்பந்தப்பட்ட பயனாளிக்கு வழங்கிய ஆணையினை ரத்து செய்து, முன்னுரிமை அடிப்படையில் புதிய பயனாளியைத் தேர்வு செய்ய வேண்டும்.
16. நடவுப் பொருட்கள் அனைத்தும் அரசு தோட்டக்கலைப் பண்ணையின் மூலம் பெறப்பட வேண்டும். அரசு தோட்டக்கலைப் பண்ணையில் உற்பத்தி குறைவாகவோ அல்லது இருப்பு இல்லை என்றாலோ, பிற அரசு பண்ணைகள் / வேளாண் பல்கலைக்கழகங்கள்/ வேளாண் அறிவியல் நிலையங்கள் அல்லது விவசாயிகளே வேறு ஏதேனும் அங்கீகாரம் பெற்ற நர்சரியில் இருந்து அதன் தரத்தை மாவட்ட அதிகாரிகள் உறுதி செய்த பின் நடவு பொருட்கள் பெறப்பட வேண்டும்.
17. விவசாயிகளுக்கு திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட நடவுப் பொருட்கள் அனைத்தும் இணையவழி (Online Billing) மூலம் அன்றைய தினமே ரசீதினை பட்டியலிடப்பட வேண்டும்.
18. உயிரி இடுபொருட்கள் / இயற்கை உரங்கள்/இரசாயன உரங்கள் போன்றவை அரசிடமிருந்தோ/தனியார் நிறுவனத்திலிருந்தோ கொள்முதல் செய்யும் பட்சத்தில் உரிய ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளைப் பின்பற்றி கொள்முதல் செய்ய வேண்டும்.
19. இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற விதைகள்/உயிரி இடுபொருட்கள்/இயற்கை உரங்கள்/இரசாயன உரங்கள் போன்றவற்றின் தரத்தினை உறுதி செய்த பின்னரே விநியோகம் செய்வதை மாவட்ட அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.
20. AHO/DyHO/ HO/ ADH ஆகியோர் தங்கள் பகுதியில் திட்டங்கள் அனைத்தும் சரியாக செயல்படுவதை உறுதி செய்ய, பல்வேறு நிலைகளில் கள ஆய்வினை முறையாக மேற்கொள்ள வேண்டும்.
21. திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு முன், செயல்படுத்தும் போது மற்றும் செயல்படுத்திய பின் என பல்வேறு நிலைகளில் அனைத்து இனங்களுக்கும் ஒரே கோணத்தில் இருந்து புவியிடக் குறியீடுடன் கூடிய (Geotagged) கள புகைப்படங்கள் வட்டார அலுவலர்களால் எடுக்கப்பட வேண்டும்.
22. வட்டார அலுவலர்கள் விவசாயி சமர்ப்பித்த திட்ட இனங்களின் பட்டியல்களை சரிபார்த்து, ஆய்வு மேற்கொண்டு அனைத்தும் சரியாக இருப்பதை உறுதி செய்த பின்பே பக்க பதிவுடன் சான்றளிக்க வேண்டும்.
23. ஒவ்வொரு இனங்களுக்கும் தொடர் நடவடிக்கை பதிவேடு பராமரிக்கப்பட்டு, அனைத்து விவரங்களும் இப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

[த.பி.பா]

24. மொத்த நிதியில் பொது பிரிவு விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 80 சதவீதமும், ஆதி திராவிட விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 19 சதவீதமும் பழங்குடியின விவசாயிகளுக்கு / பயனாளிகளுக்கு 1 சதவீதமும் மற்றும் பெண் விவசாயிகளுக்கு மொத்த ஒதுக்கீட்டில் 30 சதவீதம் என திட்ட இனங்கள் வழங்கப்பட வேண்டும்.
25. உயர் மதிப்பு திட்டங்களான பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில் இனத்தில் ஆதிதிராவிடர், பழங்குடியின சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு திட்ட இலக்குக்கு ஏற்றவாறு கூடுதலாக 20 சதவீத மானியம் வழங்கப்பட வேண்டும். (அரசாணை (2டி) எண். 81, வேளாண்மை -உழவர் நலத் (வேஉ_ 5) துறை, நாள் 28.04.2022)
26. தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பு விரிவாக்கம், உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி (பசுமைக்குடில் மற்றும் நிழல்வலைக்குடில்) மற்றும் அறுவடை பின்சார் மேலாண்மை ஆகிய இனங்கள் தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படாத மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், திருவண்ணாமலை, நாமக்கல் கரூர், திருவாரூர், நாகப்பட்டினம், விருதுநகர், மயிலாடுதுறை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படும்.
27. தேசிய தோட்டக்கலை இயக்க விதிமுறைகளின்படி ஒவ்வொரு விவசாயியும் பழங்கள், நறுமணப் பயிர்கள் மற்றும் தோட்டப் பயிர்களுக்கு அதிகபட்சம் 4 எக்டர் வரையிலும், காய்கறி மற்றும் மலர் பயிர்களுக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரையிலும் மானியம் பெற தகுதியுடையவர் ஆவார்.
28. மஞ்சள், இஞ்சி, சம்பங்கி, பசுமைக்குடில், நிழல்வலைக்குடில் குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு, காளான் வளர்ப்புக் கூடம் ஊடுபயிர் சாகுபடி பயிர் ஊக்கத்தொகை மற்றும் வெற்றிலையில் ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மை போன்ற இனங்களுக்கு கொள்முதல் செய்யப்பட்ட இடுபொருட்களின் தரத்தை உறுதி செய்தபின் அதற்கான பின்னேற்பு மானியம் விடுவிக்கப்பட வேண்டும்.
29. கூட்டு ஆய்வுக் குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை இணை/துணை இயக்குநர் ஆவார். அக்குழுவில் வேளாண் பல்கலைக்கழக நிபுணர் (அ) வேளாண் அறிவியல் நிலைய நிபுணர், வேளாண் பொறியியல் துறையின் உதவி / இளநிலை பொறியாளர் மற்றும் சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆகியோர் இடம்பெறுவர். உள்கட்டமைப்புகள் அனைத்தும் அரசு தர நிலையின் படி சரியாக உள்ளதா என்பதை கூட்டாய்வு குழு உறுதி செய்த பின்னரே நிதி விடுவிக்கப்பட வேண்டும்.
30. கூட்டு ஆய்வு குழுவிடமிருந்து திருப்திகரமான அறிக்கையைப் பெற்ற பின்னரே விவசாயிகளுக்கு நிதி பின்னேற்பு மானியமாக விடுவிக்கப்பட வேண்டும். வங்கியில் கடன் பெற்றிருந்தால் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரி கூட்டாய்வில் இடம்பெற்று சான்றளிக்க வேண்டும்.

**III. திட்ட வழிகாட்டுதல்கள்:**

திட்ட வாரியான குறிப்பிட்ட வழிகாட்டுதல்கள் பின்வருமாறு.

**I. தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கம்: - ரூ. 844.347 இலட்சம்**

1. காய்கறி பயிர்களுக்கான குழித்தட்டு நாற்றுக்கள்:

- அரசு தோட்டக்கலை பண்ணைகளில் குழித்தட்டு நாற்றுகள் உற்பத்தி செய்வதன் மூலம் காய்கறி பயிர்களான கத்தரி, மிளகாய், தக்காளி, முட்டைக்கோஸ் போன்ற பயிர்கள் சாகுபடி செய்வதை ஊக்குவித்தல்

[த.பி.பா]

- மொத்த செலவு - ரூ.20,000/ ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.8,000/ஏக்கர்.
- ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மைக்கான மானியம் நடவுப் பொருட்களுக்கு வழங்கப்படும்.

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்கு தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | காய்கறி நாற்றுகள் | 8,000 | 6,000 | 2,000 |
| 2 | ஒருங்கிணைந்த உர/பூச்சி மேலாண்மை | 3,600 | 2,000 | 1,600 |
| 3 | நிலம் தயாரித்தல், குழி அமைத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 8,400 | 0 | 8,400 |
| | மொத்தம் | 20,000 | 8,000 | 12,000 |

2.2. விதைகள் மூலம் காய்கறி பயிர்கள் பரப்பு விரிவாக்கம்:

- வெண்டைக்காய், முள்ளங்கி, கீரைகள், அவரை போன்ற காய்கறிகள் குழித்தட்டு நாற்றுகளாக உற்பத்தி செய்ய இயலாது. எனவே, அத்தகைய பயிர்கள் விதைகள் மூலம் பயிரிடப்பட வேண்டும்.
- மொத்த செலவு - ரூ.10,000/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.4,000/ஏக்கர்.

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்கு தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | காய்கறி விதைகள் | 3,200 | 3,200 | 0 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 1,600 | 800 | 800 |
| 3 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 5,200 | 0 | 5,200 |
| | மொத்தம் | 10,000 | 4,000 | 6,000 |

3. பழ பயிர்களின் பரப்பளவு விரிவாக்கம்

- பயிர்கள்: எலுமிச்சை/நார்த்தை, மா, கொய்யா, பப்பாளி, மாதுளை மற்றும் சப்போட்டா

3.1. பழங்களில் சாதாரண நடவு மூலம் பரப்பு விரிவாக்கம்

பயிர் 1. எலுமிச்சை/நார்த்தை (இடைவெளி – 4மீ X 4.5மீ = 222 செடிகள்/ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.21,992/ ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.8,797/ ஏக்கர்

[த.பி.பா]

- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.5,278/ ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான 60 % மானியம் (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 7,992 | 3,197 | 1,918 |
| 2 | இடுபொருட்கள் | 14,000 | 5,600 | 3,360 |
| | மொத்தம் | 21,992 | 8,797 | 5,278 |

பயிர் 2. மா (இடைவெளி – 10 மீ x 10 மீ = 40 செடிகள்/ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.10,200/ஏக்கர். 40 சதவீத மானியம் -ரூ.4,080/ஏக்கர்
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும். (ரூ. 2,448/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான 60 % மானியம் (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 1,800 | 720 | 432 |
| 2 | இடுபொருட்கள் | 8,400 | 3,360 | 2,016 |
| | மொத்தம் | 10,200 | 4,080 | 2,448 |

பயிர் 3: கொய்யா (இடைவெளி - 6 மீ x 6 மீ = 111 செடிகள்/ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.15,336/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.6,134/ ஏக்கர்
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.3,680/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான 60 % மானியம் (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 3,336 | 1,334 | 800 |
| 2 | இடுபொருட்கள் | 12,000 | 4,800 | 2,880 |
| | மொத்தம் | 15,336 | 6,134 | 3,680 |

பயிர் 4: பப்பாளி (இடைவெளி - 1.8 மீx1.8 மீ = 1234 செடிகள்/ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.24,662/ஏக்கர்; 40 சதவீத மானியம் - ரூ.9,865/ஏக்கர்
- முதலாண்டிற்கான 75 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.7,399/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான 75 % மானியம் (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 16,662 | 6,665 | 4,999 |
| 2 | இடுபொருட்கள் | 8,000 | 3,200 | 2,400 |
| | மொத்தம் | 24,662 | 9,865 | 7,399 |

பயிர் 5: மாதுளை (இடைவெளி – 5மீ x 5 மீ = 160 செடிகள்/ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.19,200/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.7,680/ஏக்கர்

- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.4,608/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான மானியம் 60 % (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 6,400 | 2,560 | 1,536 |
| 2 | இடுபொருட்கள் | 12,800 | 5,120 | 3,072 |
| | மொத்தம் | 19,200 | 7,680 | 4,608 |

பயிர் 6: சப்போட்டா (இடைவெளி - 8 மீ x8 மீ = 62 செடிகள் /ஏக்கர்)

- மொத்த செலவு - ரூ.18,160/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.7,264/ஏக்கர்
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.4,358/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான மானியம் 60 % (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 5,760 | 2,304 | 1,382 |
| 2 | இடுபொருட்கள் | 12,400 | 4,960 | 2,976 |
| | மொத்தம் | 18,160 | 7,264 | 4,358 |

3.2.4. அடர் நடவு மூலம் பழங்களில் பரப்பு விரிவாக்கம்

பயிர்1: மா (அடர்நடவு) (இடைவெளி - 5மீ x 5மீ = 160 செடிகள்/ஏக்கர்)

- மொத்த விலை - ரூ.16400/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.6,560/ஏக்கர்
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.3,936/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான மானியம் 60 % (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 7,200 | 2,880 | 1,728 |
| 2 | இடுபொருட்கள் | 9,200 | 3,680 | 2,208 |
| | மொத்தம் | 16,400 | 6,560 | 3,936 |

பயிர் 2: கொய்யா (அடர்நடவு) (இடைவெளி – 3மீ x 3மீ = 444 செடிகள்/ஏக்கர்)

- மொத்த விலை - ரூ.29,332/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.11,733/ஏக்கர்
- முதலாண்டிற்கான 60 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ.7,040/ஏக்கர்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | முதலாண்டிற்கான மானியம் 60 % (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 13,332 | 5,333 | 3,200 |
| 2 | இடுபொருட்கள் | 16,000 | 6,400 | 3,840 |
| | மொத்தம் | 29,332 | 11,733 | 7,040 |

5.5. நறுமணப் பயிர்களில் பரப்பு விரிவாக்கம்

5.1. விதை மற்றும் கிழங்கு நறுமணப்பயிர்கள்

- மொத்த விலை - ரூ.12000/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.4800/ஏக்கர்

பயிர் 1. விதை வகை நறுமணப்பயிர் – மிளகாய் (அரசு தோட்டக்கலை பண்ணைகள் மூலம் குழித்தட்டு நாற்றுகள் வழங்கப்படும்)

| வ. எண் | திட்ட இனங்கள் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்கு தொகை (ரூ./ ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | வீரிய இரக, காய்கறி நாற்றுக்கள் | 4800 | 4800 | 0 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 3600 | 0 | 3600 |
| 3 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 3600 | 0 | 3600 |
| | ஆக மொத்தம் | 12000 | 4800 | 7200 |

பயிர் 2: விதை வகை நறுமணப்பயிர் - கொத்தமல்லி (விதைகள்)

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | வீரிய இரக கொத்தமல்லி விதை 8 கி.கி/ ஏக்கர் | 3,200 | 3,200 | 0 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 3,200 | 1,600 | 1,600 |
| 3 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 5,600 | 0 | 5,600 |
| | மொத்தம் | 12,000 | 4,800 | 7,200 |

பயிர் 3: கிழங்கு வகை நறுமணப்பயிர் -மஞ்சள் மற்றும் இஞ்சி

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | மஞ்சள் கிழங்கு – 800கி.கி/ ஏக்கர் | 8,000 | 4,800 | 11,200 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 2,000 | 0 | 4,000 |
| 3 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 2,000 | 0 | 5,600 |
| | மொத்தம் | 12,000 | 4,800 | 20,800 |

[த.பி.பா]

5.2. பல்லாண்டு நறுமணப்பயிர்கள்

- மொத்த விலை - ரூ.20,000/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.8,000/ஏக்கர்

**பயிர் 1: மிளகு (இடைவெளி – 3மீ x 3மீ = 444 செடிகள்/ஏக்கர்)**

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப்பொருள் மற்றும் பற்றி வளரும் மரம் (மிளகு மற்றும் சில்வர் ஓக்) | 4,000 | 4,000 | 0 |
| 2 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 12,000 | 0 | 12,000 |
| 4 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 4,000 | 4,000 | 0 |
| | மொத்தம் | 20,000 | 8,000 | 12,000 |

**பயிர் 2: கறிவேப்பிலை (இடைவெளி – 1.2மீ x 1.5மீ = 2,222 செடிகள்/ஏக்கர்)**

| வ.எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 20,000 | 8,000 | 12,000 |
| | மொத்தம் | 20,000 | 8,000 | 12,000 |

6.6. மலர் பயிர்களில் பரப்பு விரிவாக்கம்

**6.1. உதிரி மலர்கள்:**

- மொத்த விலை - ரூ.16,000/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.6400/ஏக்கர்

**பயிர் 1: மல்லிகை (இடைவெளி – 1.25மீ x 1.25மீ = 2560 செடிகள்/ஏக்கர்)**

| வ.எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 16,000 | 6,400 | 9,600 |
| | மொத்தம் | 16,000 | 6,400 | 9,600 |

**பயிர் 2: கனகாம்பரம்: (இடைவெளி – 60செ.மீ x 60செ.மீ = 11,111 செடிகள்/ஏக்கர்)**

| வ.எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத் தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 16,000 | 6,400 | 9,600 |
| | மொத்தம் | 16,000 | 6,400 | 9,600 |

[த.பி.பா]

பயிர் 3: செண்டுமல்லி (நாற்றுக்கள்): (இடைவெளி – 45செ.மீ x 35 செ.மீ = 25,397 செடிகள்/ஏக்கர்)

| வ.எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 16,000 | 6,400 | 9,600 |
| | மொத்தம் | 16,000 | 6,400 | 9,600 |

பயிர் 4: ரோஜா (இடைவெளி – 2மீ x 1மீ = 2,000 செடிகள்/ஏக்கர்)

| வ.எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 16,000 | 6,400 | 9,600 |
| | மொத்தம் | 16,000 | 6,400 | 9,600 |

பயிர் 5: வெட்சி மலர் (Ixora) (இடைவெளி – 2மீ x 2 மீ = 1,000 செடிகள்/ஏக்கர்)

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 10,000 | 6,400 | 3,600 |
| 2 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 4,000 | 0 | 4,000 |
| 3 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 2,000 | 0 | 2,000 |
| | மொத்தம் | 16,000 | 6,400 | 9,600 |

6.2. கிழங்கு வகை மலர்கள் (சம்பங்கி):

- மொத்த விலை - ரூ.60,000/ஏக்கர், 40 சதவீத மானியம் - ரூ.24,000/ஏக்கர்

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ / ஏக்கர்) | மானியம் (ரூ / ஏக்கர்) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப் பொருட்கள் | 20,000 | 20,000 | 0 |
| 2 | நிலம் தயாரித்தல், குழி எடுத்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் மற்றும் பின்செய் நேர்த்திகள் | 24,000 | 0 | 24,000 |
| 3 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 16,000 | 4,000 | 12,000 |
| | மொத்தம் | 60,000 | 24,000 | 36,000 |

II. உயர் தொழில்நுட்ப முறையில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி - ரூ.160.025 இலட்சம்

- ஒரு விவசாயிக்கு 4000 ச.மீ வரை வழங்கப்படும்

1. பசுமைகுடில் - ரூ.14.025 இலட்சம்

- 50% பின்னேற்பு மானியத்திற்கான விவர அட்டவணை பின்வருமாறு, சொட்டுநீர் பாசன அமைப்பு அவசியம்.

| வ. எண் | விவரம் | | அலகு விலை (ரூபாய் சதுர மீட்டரில்) | மானிய விலை (ரூபாய் சதுர மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | பசுமைக் குடில்கள் (இயற்கையாக காற்றோட்ட அமைப்பு/ குழாய் வடிவ அமைப்பு) அலகு: ச.மீ | | | |
| | 1. | 500 வரை | 1060 | 530 |
| | 2. | 500 - 1008 | 935 | 467.5 |
| | 3. | 1008 - 2080 | 890 | 445 |
| | 4. | 2080 - 4000 | 844 | 422 |

2. நிழல் வலை குடில் (குழாய் வடிவ அமைப்பு) - ரூ.71.00 இலட்சம்

- 50 % பின்னேற்பு மானியத்தொகை – ரூ. 355 / ச.மீ. வழங்கப்படும்.

| வ.எண் | விவரங்கள் | அளவு | விதிமுறைகள் |
|---|---|---|---|
| 1 | நிழல் வலைக் குடிலுக்கான பரப்பு (தரை மட்டம்) | 500-4000 ச.மீ | ஒரு ச.மீ க்கு ரூ. 710 வீதம் 50% மானியத்தில் ஒரு விவசாயிக்கு 4000 ச.மீ. வழங்கப்படும். |
| 2 | முதன்மை கம்பிகள் மற்றும் கட்டமைப்புகள் | 60 மி.மீ G.I குழாய் | |
| 3 | நீளம் மற்றும் அகலம் | 48 மி.மீ G.I குழாய் | |
| 4 | நீளம் | 42 மி.மீ G.I குழாய் | |
| 5 | நிழல் வலை தன்மை | 50% நிழல் | |
| 6 | சொட்டு நீர் பாசனம் / மூடுபனி / பனித்துளி அமைப்பு | ஆம் | |

3. ஹைட்ரோபோனிக்ஸ் மற்றும் செங்குத்து தோட்டம் - ரூ.75.00 இலட்சம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் – சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம்.
- மொத்த விலை – ரூ. 30,000/அலகு, 50 சதவீத மானியம்– ரூ. 15,000/அலகு
- ஒரு பயனாளிக்கு 1 அலகு மட்டுமே வழங்கப்படும்.
- திட்ட ஆவணங்கள்: ஏதேனும் ஒன்று (அடையாள அட்டை/ முகவரி ஆதாரம்/ ஆதார் அட்டை) மற்றும் பயனாளியின் புகைப்படம்

**ஹைட்ரோபோனிக்ஸ்**

| வ. எண் | பொருள் | விவரக் குறிப்பு | அளவு | விலை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | NFT தடங்கள் (NFT Channel) | யு.பி.வி.சி, 100x50 மி.மீ, 32 அடி, மூடிய மற்றும் திறந்த விளிம்பு மூடி | - | 8500 |
| 2. | தாங்கும் அமைப்பு | துருப்பிடிக்காத எஃகு (Stainless Steel, Dismantle, Easy to assemble) 4x2 அடி, 1 அங்குலம் விட்டம். | - | 7000 |

[த.பி.பா]

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | குழாய் இணைப்புகள் | யு.பி.வி.சி, 1 அங்குலம் விட்டம், T & L bend, inlets & outlets | - | 1500 |
| 4. | மோட்டார் | 4o வாட் நீரில் மூழ்கிய மோட்டார் | 1 | 2500 |
| 5. | பெர்லைட் கலவை | < 0.5 மின்கடத்து திறன், பெர்லைட் கலவை | 1 | 4000 |
| 6. | ஊட்டச்சத்து | மூன்று மாதத்திற்கான ஊட்டச்சத்து | 2 | 2250 |
| 7. | வலை அமைப்பிலான தொட்டி (Planter pots) | 2 அங்குலம் | 80 | 1500 |
| 8. | தொட்டி | 25 லிட்டர் | 1 | 1500 |
| 9. | கார அமில நிறங்காட்டி | | 1 | 250 |
| 10. | விதைகள் | | | 1000 |
| | மொத்தம் | | | 30000 |

**செங்குத்து தோட்டம்**

| வ. எண் | பொருள் | விவரக்குறிப்பு |
|---|---|---|
| 1. | கட்டமைப்பு (Panel) | 18x6 அங்குலம் (3 எண்கள்) |
| 2. | பி.வி.சி தொட்டிகள் | 5 அங்குல விட்ட தொட்டி (500) |
| 3. | விதைகள்/செடிகள் | |
| 4. | சொட்டு நீர் பாசன அமைப்பு | |
| 5. | ஊட்டச்சத்து | மூன்று மாதத்திற்கான ஊட்டச்சத்து |
| 6. | கார அமில நிறங்காட்டி | |
| 7. | பெர்லைட் கலவை | < 0.5 மின்கடத்து திறன், பெர்லைட் கலவை |

ஒரு சதுர அடிக்கு ரூ.750 வீதம் 40 சதுர அடியில் அமைக்கப்படும்.

**III: அறுவடைக்குப்பின் மேலாண்மை - ரூ. 70.00 இலட்சம்**

1. **குறைந்த விலை வெங்காய சேமிப்பு கிடங்கு**

- மொத்த விலை – ரூ. 7,000/மெ.டன்
- 50 சதவித மானியம் – ரூ. 3,500/மெ.டன்
- விவசாயியின் தேவைக்கேற்ப 5 மெ.டன் (ரூ.17,500) முதல் 25 மெ.டன் (ரூ.87,500) வரை மானியத்துடன் வழங்கப்படும்.

**IV: முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்டத் திட்டம்- ரூ.112.50 இலட்சம்**

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (நீலகிரி தவிர)
- திட்ட ஆவணங்கள்: ஏதேனும் ஒன்று (அடையாள அட்டை / முகவரி ஆதாரம் / ஆதார் அட்டை) மற்றும் பயனாளியின் புகைப்படம் (18 வயதிற்கு மேல்)

**1. மாடித்தோட்டத் தளைகள் விநியோகம்**

- ஒவ்வொரு தொகுப்பிலும் பின்வரும் பொருட்கள் இருக்க வேண்டும்.

| வ.எண் | பொருட்கள்* | அளவு |
|---|---|---|
| 1 | செடி வளர்ப்புப் பைகள் | 6 எண்கள் |

[த.பி.பா]

| | | |
|---|---|---|
| 2 | 6 கிலோ தென்னை நார்கழிவு கட்டிகள் | 2 எண்கள் |
| 3 | 6 வகையான காய்கறி விதைகள் (அதிக மகசூல் தரும் வீரிய ஒட்டு இரகம் மற்றும் பாரம்பரிய வகைகள்) (அரசு நிறுவனம் மூலம்) | 6 விதை பொட்டலங்கள் |
| 4 | அசோஸ்பைரில்லம் (அரசு நிறுவனம் மூலம்) | 200 கிராம் |
| 5 | பாஸ்போபாக்டீரியா (அரசு நிறுவனம் மூலம்) | 200 கிராம் |
| 6 | டிரைகோடெர்மாவிரிடி (அரசு நிறுவனம் மூலம்) | 200 கிராம் |
| 7 | வேப்பெண்ணெய் மருந்து | 100 மில்லி |
| 8 | மாடித் தோட்ட காய்கறி வளர்ப்பு முறைக்கான கையேடு | 1 எண் |

*போக்குவரத்து செலவு உட்பட

- ஒரு தொகுப்பின் மொத்த விலை - ரூ.900/-
- 50 சதவீத மானியம் - ரூ.450/-
- ஒரு பயனாளி அதிகபட்சமாக இரண்டு தொகுப்புகள் வரை பெறமுடியும்.
- இதன் மூலம் மாடித்தோட்ட மற்றும் வீட்டுத் தோட்டங்களை ஊக்குவிக்கலாம்.

| வ. எண் | விவரம் | விலை (ரூ.) | மானியம் (ரூ.) | பயனாளியின் பங்குத்தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | மாடித்தோட்ட தொகுப்பின் விலை | 900 | 450 | 450 |

- பயனாளியின் பங்குத்தொகையாக ரூ.450 வசூலிக்கப்படுகிறது.

**V: அரசு மாணவியர் விடுதிகளில் தோட்டம் அமைத்தல் - ரூ. 20.00 இலட்சம்**

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள்
- மொத்த விலை – ரூ. 8,000 / 100 சதவீத மானியம்
- அனைத்து அரசு மாணவியர் விடுதிகள், குறிப்பாக ஆதி திராவிட மற்றும் பழங்குடியின அரசு மாணவியர் விடுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (பரப்பு – குறைந்தபட்சம் 5 செண்ட்)
- வேலி பாதுகாப்பு மற்றும் தண்ணீர் வசதி உள்ள மாணவியர் விடுதியில் மட்டுமே தோட்டம் அமைத்தல் வேண்டும். இதனை, உதவி தோட்டக்கலை அலுவலர் ஆய்வு செய்த பின்பு, தோட்டக்கலை உதவி இயக்குநர் அதனை சரிபார்த்த பின்னர் தோட்டம் அமைத்தல் வேண்டும்.
- தோட்டம் அமைத்த பின்பு வாரம் ஒருமுறை உதவி தோட்டக்கலை அலுவலர் தோட்டத்தினை பார்வையிட்டு அதன் நிலை குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். (இரண்டு ஆண்டு வரை)
- தோட்டக்கலை உதவி இயக்குநர் வாராந்திர ஆய்வு கூட்டத்தில் நிர்ணயம் செய்த இலக்கிற்கான விடுதி தோட்டத்தின் நிலையை ஆய்வு செய்து மாதம் ஒருமுறை நேரில் பார்வையிட்டு சம்பந்தப்பட்ட மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

[த.பி.பா]

தோட்டத்தில் பின்வரும் இனங்கள் இருக்க வேண்டும்.

| வ. எண் | இனங்கள் | அளவு (எண்கள்) | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | பழச்செடிகள் – மா ஒட்டு (1 எண்), சப்போட்டா ஒட்டு (1 எண்), நெல்லி ஒட்டு (1 எண்), எலுமிச்சை பதியன் (1 எண்), கொய்யா பதியன் (1 எண்), வாழை கன்றுகள் (5 எண்கள்) மற்றும் பப்பாளி விதைக்கன்றுகள் (5 எண்கள்), தென்னங்கன்றுகள் (3 எண்கள்) (அரசு நிறுவனம் மூலம்) | | 605 |
| 2. | அதிக மகசூல் தரும் விதைகள் (முருங்கை, முள்ளங்கி மற்றும் கீரைகள் கட்டாயம்) – 4 தொகுப்புகள் | 10 வகை விதைகள் -ரூ.25/ பொட்டலங்கள் | 1000 |
| 3. | மூலிகை மற்றும் பிற செடிகள் (துளசி, கற்பூரவள்ளி, கற்றாழை, புதினா, பிரண்டை, வெட்டிவேர் முதலியவை) மற்றும் பிற செடிகள் (கறிவேப்பிலை) (அரசு நிறுவனம் மூலம்) | 75 | 1,500 |
| 4 | கருவிகள் மற்றும் உபகரணங்கள் (தனியார் நிறுவனம் மூலம்) களை வெட்டி (Hand Hoe) (2 எண்கள்), மண்வெட்டி (2 எண்கள்), பூவாளி (1 எண்), கார்டன் ரேக் (2 எண்கள்), கவாத்து கத்தரி – 2 எண் முதலியவை. | | 4,000 |
| 5 | குழியெடுத்தல், நடவு செய்தல் மற்றும் போக்குவரத்து உட்பட | | 895 |
| | **மொத்தம்** | | **8,000** |

- தோட்டக்கலை இணை/துணை இயக்குநர், வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், மாணவ விடுதி பொறுப்பாளர் அடங்கிய குழு, தரநிலையின்படி நிறுவப்பட்ட தோட்டத்தை ஆய்வு செய்து சான்றளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நிலையிலும் கட்டாயமாக ஆவணப்படுத்த வேண்டும்.

**VI: உயர் விளைச்சல் பெற துல்லிய பண்ணையத் திட்டம்-ரூ.250.00 இலட்சம்**

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர)
- நுண்ணீர் பாசன வசதியை பெற்றுள்ள விவசாயிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற இயலும்.
- மொத்த விலை – ரூ. 12,000/ஏக்கர். (காய்கறி விதைகள் மற்றும் நீரில் கரையும் உரங்கள்)
- உதவித்தொகை–ரூ.6,000/ஏக்கர். (காய்கறி விதைகள் மற்றும் நீரில் கரையும் உரங்கள்)
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் வரை வழங்கப்படும்.

| வ.எண் | இனங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | காய்கறி விதைகள் | 2,000 |
| 2 | நீரில் கரையும் உரங்கள் (WSF) | 4,000 |
| | **மொத்தம்** | 6,000 |

[த.பி.பா]

VII: கூடுதல் வருமானம் ஈட்டும் சிறு தொழில்கள் - ரூ. 37.50 இலட்சம்

காளான் வளர்ப்பு கூடம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர)
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 1 அலகு மட்டும் வழங்கப்படும்
- மொத்த விலை – ரூ.1 இலட்சம்/ பயனாளி.
- 50 சதவீத மானியம் – ரூ.50,000/ அலகு/ பயனாளி

| வ. எண் | விவரங்கள் (தேசிய தோட்டக்கலை இயக்க வழிமுறைகளின் படி) | தொகை (ரூ.) |
|---|---|---|
| அ | ஆரம்ப கட்ட முதலீடு | |
| 1 | கட்டுமான விலை: காளான் ஓலைக் கொட்டகை (600 ச.அடி) | 63,000 |
| 2 | தெளிப்பான் (1 எண்) | 3,000 |
| 3 | வெப்பமானி | 1000 |
| | மொத்தம் (அ) | 67,000 |
| ஆ | தொடர் செலவு | |
| 4 | வைக்கோல் (100 கி.கி) – ரூ.5/ கி.கி | 5,000 |
| 5 | நெகிழிப் பையின் விலை - ரூ.200/கி.கி | 2,000 |
| 6 | காளான் விதை விலை – ரூ.70.00/கி.கி (80 கி.கி) | 5,600 |
| 7 | கூலித்தொகையாக நாள் ஒன்றுக்கு ரூ.300 வீதம் 2 நபருக்கு (10 நாட்கள்) | 6,000 |
| 8 | பயிர் பாதுகாப்பு மருந்துகள் | 3,000 |
| 9 | இதர செலவு (மின்சாரம், பைகள், கயிறு, அலமாரிகள், போன்றவை) | 11,400 |
| | மொத்தம் (ஆ) | 33,000 |
| | ஆக மொத்தம் (அ+ஆ) | 1,00,000 |

மேற்கண்ட செலவு சிப்பி காளான் வளர்ப்புக்காக ஆகும். மேலும், பட்டன் காளான் வளர்ப்பதை ஊக்குவிக்கவும் இதே இனங்களை பயன்படுத்தலாம். இருப்பினும், ஒரு அலகிற்கு அதிகபட்ச மானியம் ரூ.50,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும். விவசாயிகளின் தேவை, பயிரிடப்படும் காளான் வகை, பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் சந்தை விலை நிலவரம் ஆகியவற்றின் அடிப்படையில் இனங்கள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் மாறுபடும்.

சம்மந்தப்பட்ட தோட்டக்கலை இணை/ துணை இயக்குநரை தலைவராகக் கொண்ட கூட்டு ஆய்வுக் குழு, சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை அலுவலர் மற்றும் மற்ற வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு தோட்டக்கலை உதவி இயக்குநர் ஆகியோர் தொகை வழங்கும் முன் கட்டமைப்பை கூட்டாய்வு செய்து சரிபார்க்க வேண்டும்.

[த.பி.பா]

VIII: பயிர் ஊக்கத்தொகை - ரூ. 500.00 இலட்சம்

1. உழவர் சந்தைகளில் காய்கறி வரத்தை அதிகரிப்பதற்கான சிறப்பு திட்டம்
   - செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர)
   - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக திட்டப்பயன் 5 ஏக்கர் வரை வழங்கப்படும்.
   - அதிகபட்ச உதவித்தொகை – ரூ.8,000/ ஏக்கர்.
   - பயிர் ஊக்கத் தொகை திட்ட இனத்தின் கீழ் மானியம் பெறும் விவசாயிகளுக்கு பரப்பு விரிவாக்க திட்ட இனத்தின் கீழ் மானியம் வழங்கப்படக்கூடாது.
   - அடங்கல் மற்றும் இ-அடங்கலை சரிபார்த்த பின்னரே பயனாளிக்கு உதவித்தொகை வழங்க வேண்டும்.
   - உழவர் சந்தையைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும்.
   - பயனாளிகளைத் தேர்வு செய்யும் போது, அவர்கள் எந்த உழவர் சந்தையுடன் இணைக்கப்பட வேண்டும் என்று உறுதி செய்த பின்பே தேர்வு செய்யப்பட வேண்டும்.
   - இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகளுக்கு உழவர் சந்தைக்கான அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் உழவர் சந்தைக்கு காய்கறி எடுத்துச்செல்வது உறுதி செய்யப்பட வேண்டும்.

IX: ஊடுபயிர் சாகுபடியை ஊக்குவித்தல் - ரூ. 575.00 இலட்சம்

1. தென்னையில் ஊடுபயிராக வாழை- ரூ. 375.00 இலட்சம்
   - செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர)
   - மொத்த செலவு – ரூ. 35,000/ஏக்கர்.
   - 40 சதவீத மானியம் – ரூ. 14,000/ஏக்கர்
   - முதலாண்டிற்கான 75 சதவீத மானியத் தொகை மட்டும் வழங்கப்படும் (ரூ. 10,500/ஏக்கர்)
   - ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை வழங்கப்படும்

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த தொகை (ரூ. / ஏக்கர்) | மானியம் (ரூ. / ஏக்கர்) | முதல் ஆண்டிற்கான உதவித்தொகை 75 % (ரூ. / ஏக்கர்) |
|---|---|---|---|---|
| 1 | நடவுப்பொருட்கள் | 10,000 | 4,000 | 3,000 |
| 2 | இடுபொருட்கள் | 16,250 | 6,500 | 4,875 |
| 3 | நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்பாசனம் & பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | 8,750 | 3,500 | 2,625 |
| | மொத்தம் | 35,000 | 14,000 | 10,500 |

2. வாழையில் ஊடுபயிராக காய்கறிகள்- ரூ. 200.00 இலட்சம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை மற்றும் நீலகிரி தவிர)
- மொத்த செலவு – ரூ. 10,000/ஏக்கர்.
- 40 சதவீத மானியம் - ரூ. 4,000 /ஏக்கர்
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை வழங்கப்படும்

| வ. எண் | இனத்தின் பெயர் | மொத்த செலவு (ரூ. / ஏக்கர்) | மானியம் (ரூ. / ஏக்கர்) |
|---|---|---|---|
| 1 | காய்கறி விதைகள் | 3,200 | 1,280 |
| 2 | ஒருங்கிணைந்த உர / பூச்சி மேலாண்மை | 2,600 | 1,040 |
| 3 | நிலம் தயாரித்தல், நடவு செய்தல், நீர்ப்பாசனம் & பயிர்சாகுபடிக்கு இடையேயான நடைமுறைகள் | 4,200 | 1,680 |
| | மொத்தம் | 10,000 | 4,000 |

X: தோட்டக்கலை கருவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகம் (எண்கள்) - ரூ. 150.628 இலட்சம்

- செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் (சென்னை தவிர)

மானியத்திற்கான செலவு விதிமுறைகள்

| வ. எண் | இனங்கள் | அலகு விலை | மானியம் % | ஒரு அலகிற்கான மானிய விலை |
|---|---|---|---|---|
| 1 | நெகிழிக் கூடைகள் (10 எண்கள்) | 7,500 | 50% | 3,750 |
| 2 | அலுமினிய ஏணிகள் | 20,000 | 50% | 10,000 |
| 3 | பழங்கள் அறுவடை செய்ய பயன்படுத்தும் வலைக்கருவி | 500 | 50% | 250 |
| 4 | மலர் அறுவடைக்கான முகப்பு விளக்குகள் | 500 | 50% | 250 |
| 5 | கவாத்து கத்தரி | 400 | 50% | 200 |
| 6 | நாப்ஸாக் (Battery Operated) தெளிப்பான் (8-12 லிட்டர்) | 6,200 | 50% | 3,100 |
| 7 | நாப்ஸாக் (Battery Operated) தெளிப்பான் (12-16 லிட்டர்) | 7,600 | 50% | 3,800 |
| 8 | மரவள்ளி கரணை வெட்டும் இயந்திரம் | 7,000 | 50% | 3,500 |

- ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ஒரு அலகு மட்டும் வழங்கப்படும்.
- ஒரு பயனாளி மேற்கண்ட கூறுகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே பெற முடியும்

<u>XI. வெற்றிலையில் ஒருங்கிணைந்த உர மற்றும் பூச்சி மேலாண்மை ரூ.30.00 இலட்சம்</u>

- **செயல்படுத்தப்படும் மாவட்டங்கள்:** அனைத்து வெற்றிலை பயிரிடும் விவசாயிகளுக்கும் தகுதி பெறுவர்.
- ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2.5 ஏக்கருக்கு மானியம் வழங்கப்படும்
- ஒரு விவசாயிக்கு உதவித் தொகை பின்னேற்பு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.4,000/- வழங்கப்படும்.

<u>XII: ஆவணப்படுத்துதல்</u>

- திட்ட அடிப்படையிலான உள்கட்டமைப்பிற்கு மாவட்ட அலுவலர்களால் கையேடு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் பணியின் பல்வேறு நிலைகள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- அனைத்து நிலைகளிலும் விவசாயிகளின் மகசூல் மற்றும் வருமானத்தைப் பதிவு செய்து ஒவ்வொரு வட்டார அளவிலும் இன வாரியாக சாதனைகள் பராமரிக்கப்பட்டு, அது இயக்குநரகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- பயனாளிகள் வாரியாக பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் மகசூல், ஈட்டப்பட்ட வருமானம் போன்றவை மற்றும் பிற அளவுருக்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.
- விவசாயி வயலின் முன் காட்சிப் பலகை வைக்க வேண்டும். தமிழ்நாடு அரசின் சின்னம் மற்றும் SHDS ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் வடிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

**உயர் மதிப்பிலான இனங்களுக்கு வைக்கவேண்டிய நிரந்தர**
**விளம்பர பலகை (4' x 3' அடி)**
**தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை**
**நிதி உதவி - SHDS – 2022-2023**

| | |
|---|---|
| விவசாயி பெயர்: | இனம்: |
| த/பெ / க/பெ: | பரப்பு: |
| கிராமம்/சர்வே எண்: | மதிப்பு: ரூ. |
| வட்டாரம்/மாவட்டம்: | வழங்கப்படும் உதவித்தொகை: ரூ. |

- திட்டம் குறித்த விபரப்பலகை அமைத்த பிறகு, பயனாளி விவசாயியுடன் புகைப்படம் எடுக்கப்பட்டு தொடர்நடவடிக்கை பதிவேட்டில் ஒட்டப்பட வேண்டும்.

**சி. சமயமூர்த்தி,**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

/உண்மை நகல்/

31/05/2022
பிரிவு அலுவலர்